www.padippakam.com

● 9—4
● டிசம்பர் '2000
● இதழ் எண் : 84
● விலை ரூ. 3/-

# ஏழைதாசன்

- திங்கள் இலக்கிய இதழ் -

✶ 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' — கண்ணதாசன்

## சிற்றிதழ் நேசர்! முத்தமிழ் தாசர்!



"வ.க. படிப்பது, எழுதுவது, ஊர்கள் சுற்றுவது என்பதைத் தனது வாழ்க்கையாக விரித்துக் கொண்டார். இந்த வாழ்க்கை முறைக்கு மனைவி, குடும்பம், பொறுப்புகள் எல்லாம் தடையாக இருக்கும் என்பதால், திருமணம் செய்து கொள்ளாமல் தனியனாகவே வாழ்வது என உறுதிபூண்டு, அவ்விதமே வாழ்கிறார்."

'இலக்கிய ரிஷி'

**வல்லிக்கண்ணன்**

சாகித்ய அகாதமி விருது பெற்றவர்,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

படிப்பகம்

www.padippakam.com

## புகைப்படச் செய்திகள் :



தமிழகம் - பழனி வந்திருந்த ஜெர்மனி வாழ் 'சமூக ஜோதி' **தம்பி புவனேந்திரன்** மனைவியார் திருமதி **சத்தியபாமா** ஆகியோருக்கு மலர்மாலை, சந்தனமாலை, பொன்னாடை அ வித்து, பழனித் தமிழ்ச் சங்கம் சார்பாக **டாக்டர். இளங்கம்பன்** வரவேற்பளித்த போது எடுத்த படம்.



தமிழகம் இராஜபாளையத்தில் நடைபெற்ற ஆன்மீகக் கூட்டத்தில் ஜெர்மனி **தம்பி புவனேந்திரன்** பேசிய போது எடுத்த படம். பன்னிரு திருமுறைமன்ற தலைவர் பட்டாடை போர்த்தி பாராட்டுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

# 'The way of Haiku'

- Mans contribution
  to this quiet Mountain pond
  is an old beer can.

- Lovely Butterfly
  stop drifting and setlbe down
  you blur the garden.

- The older cat waits
  until the trapped fly return
  to yearn at the pane.

- Atter a night of wind
  winter stands eveywhere
  over autumn ground.

- Milk left in my glass
  draws the paw of the kitlen
  unto emptiness.

- The lowering spider
  rides out every wind
  to reach his goal below.

- When I mouth new sounds
  for fun, my dogs run to see
  if I am in Frouble.

## JAMES HACKETT



படிப்பகம்

www.padippakam.com



## பொன். குமார், சேலம்-6.

☐ மனிதனின் பங்களிப்பு
இந்த அமைதியான மலைக்குளத்துக்கு
ஒரு பழைய பீர் டப்பா.

☐ அழகான பட்டாம் பூச்சியே
சுற்றுவதை நிறுத்தி அமர்ந்துகொண்டு
மங்கலாக்குகிறாய் தோட்டத்தை.

☐ கிழப்பூனை காத்துள்ளது
தந்திரமான ஈ திரும்பும் வரை
ஜன்னலருகே ஏக்கத்துடன்.

☐ காற்றடித்த இரவின் பின்
எங்கும் பரவியுள்ளது குளிர்காலம்
இலையுதிர் கால தரை மீது.

☐ பாத்திரத்தில் சிந்தும் பால்
பூனைக்குட்டி பாதத்தை இழுக்கிறது
காலியாகும் வரை.

☐ கீழிறங்கும் சிலந்தி
காற்றுகளை வெற்றிக்கண்டு பயணிக்கிறது
கீழேயுள்ள இலக்கை அடைய.

☐ வேடிக்கைக்காக சப்தமிடுகையில்
என் நாய் ஓடிவந்து பார்க்கிறது
துன்பத்தில் இருக்கிறேனா என்று.



படிப்பகம்

www.padippakam.com

# பட்டாம் பூச்சிகளின் சார்பாக...



எப்படி சிக்கியதோ
தெரியவில்லை
பிடித்துக் கொண்டான்.
சுதந்திரத்தின் நுனி
தன் கையில் இருப்பதாக
கர்வம்.

நூலை சுண்டி
பறக்க வைப்பான்
சட்டென இழுத்து
திசையை மாற்றுவான்.
உயரம் நோக்கும் போது
தரையிறக்கித்
தவிக்க வைப்பான்.

சுதந்திரக் காற்றை
சுவாசிக்கும் ஜீவன்களை
சிறை பிடிப்பதென்பது
சிறுபிள்ளைத்தனம்.
பட்டாம் பூச்சிகள்
மனிதர்களல்ல.
நம் வீட்டு
வாசமலர்களைத்
தேடி வருகின்ற
பட்டாம் பூச்சிகளை
அனுமதி.
உயிர்களோடு
விளையாட வேண்டாம்.
தர்ம நியாயங்களை
அனுசரித்துச் செல்.

என்றெல்லாம் மொழி சொல்லி
விளையாட்டுப் பொருளாய்
குழந்தை கையில் சிறைபட்டிருந்த
அதை விடுவித்தேன்.
விட்டு விடுதலையாகி
தொலைவாய்
அப்பாலுக்கு அப்பால்
சுதந்திரத்தை நோக்கிப்
பயணிக்கும் முன்பாக
உன் ஜீவகாருண்யத்திற்கு நன்றி என
என் முகத்தை முத்தமிட்டுச்
சென்றது அந்த வண்ணத்துப்பூச்சி.

- நல்லான் இராமசாமி -
குறிக்காரன்வலசு,
கரூர் மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# காவிரித்தாயே, கைகொடுப்பாயே!

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
பண்ணிசைத்து இவ்வாறு பழம்புலவர் பாடியுள்ளார்.
வர்ழவைக்கும் காவிரியில் வளம்பலவும் இருந்ததினால்
சோழவளநாடு சோறுடைத்து என்னாளும் என்றார்கள்.
கண்ணகிக்குப் பாலூட்டிக் காவியத்தை வளர்த்தவளாம்
மண்ணுக்கு ஒருபெருமை மாநிலத்தில் தந்தவளாம்.
நீயில்லா தமிழ்நாடு, நிலவில்லா வானமடி
தாயில்லா சேயைப்போல் தமிழ்நாடு வாடுவதா?
கர்னாடக மாநிலத்தில் காவிரியில் சேர்கின்ற
துணையாறு எவையென்று சொல்கின்றேன் கேட்டிடுவீர்
'கபினி'யுடன் 'ஏமாவதி' 'லட்சுமணதீர்த்தா' 'லோக்பவானி'
'நொய்யல்' போன்றவைகள் காவிரியில் சேர்வதினால்
பொய்யா வளம்பெற்று பெரும்புகழும் நீபெற்றாய்
மெய்யாய் உன்நீரை நம்பியே இருக்கின்றோம்!
வான்பொய்த்த காலத்தும் தான்பொய்யாள் என்றெல்லாம்
ஆன்றோர்கள் சொன்னார்கள் அத்தனையும் மறந்திட்டாய்
குடகுமலைக் காரியம்மா குன்றாத வளமெல்லாம்
அடகுஇன்று வைத்தாயா அன்புடனே அழைக்கின்றேன்
காற்றுக்கு விலங்கிட்டோர் காசினியில் யாருமில்லை
ஆற்றுக்கு மட்டும்சிலர் அப்படியே நினைப்பானேன்?
நடந்தாய் வாழி காவிரித்தாயே
தஞ்சைத் தரணிக்குக் கைகொடுப்பாயே!

---

'இலக்கிய மாமணி' அல்ஹாஜ்
கவிஞர் **கானதாசன்,** சென்னை-16.

---



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

உலகத் தமிழர் பேராசிரியர் இர.ந. வீரப்பனார் அவர்களுக்கும் சேலத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. நவம்பர் முதல் தேதி நான் சேலம் போயிருந்தேன். நண்பர் திரு. சோலை. இருசன் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது பேராசிரியர் இர.ந. வீரப்பனார் அவர்களைப் பற்றி பேச நேரிட்ட போது, சோலை. இருசன் அவர்கள் துக்கம் மேலிட கதறி அழ ஆரம்பித்து விட்டார். பேராசிரியர் அவர்களுடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் இணைந்து செயல்பட்ட நாட்களை நினைவு கூர்ந்தார். ஏழாவது மாநாட்டை முடித்துக் கொண்டு புதுவை சென்றவர் திரும்பவில்லை. அவருடைய பூத உடல்தான் மறைந்ததே ஒழிய அவர் உ.த.ப. இயக்கத்திற்காக ஆற்றியப் பணி என்றென்றும் மறையாது நவம்பர் ஏழைதாசன் இதழில் நினைவேந்தல் கட்டுரை வெளியிட்டு பெருமைபடுத்தி இருக்கிறீர்கள். அவர் நாமம் வாழ்க.

— **சங்கொலி பாலகிருஷ்ணன்,** மும்பை - 19

உலகத் தமிழர் வீரப்பனார் பற்றிய அரிய தகவல்களை பேராசிரியர் கதிர் முத்தையன் தந்துள்ளார். 70 அகவை வரையும் மருத்துவமனைக்கு போகாதவர் என்ற தகவல் வியப்பாக உள்ளது. உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கவே ஓயாது உழைத்த அந்த அரிய தமிழரை நினைவுகூர்ந்த ஏழைதாசனை பெரிதும் பாராட்டுகிறேன். 'வழக்கம்' கவிதை மிக நன்று. அதில் பொதிந்துள்ள சோகம் மனதை நெருடியது. 'அய்க்கூ' நிறைய வெளியிடுங்கள். அதுதான் மூன்று வரியில் பல சிந்தனைகளைத் தருகிறது

— **ச. நாத்திக நந்தனார்,** சென்னை - 48

சிற்றிதழைத் தொடர்ந்து நடத்துவதே பெரும் சாதனையாகும். அதிலும் இணையத்தில் இடம் பெற்றிருப்பது உங்களது அயராத உழைப்பையும், தமிழின் மீதும், தமிழ் மக்களின் மீதும் நீங்கள் கொண்டிருக்கும் அன்பையும், மதிப்பையும் காட்டுகிறது. பக்கங்கள் குறைவாக இருந்தாலும் பயனுள்ள கட்டுரைகள், கவிதைகள், அறிஞர்களின் அறிமுகம் போன்றவற்றால் தலைசிறந்த இதழாக ஏழைதாசன் திகழ்கிறது.

— பாவலர். **கருமலைத் தமிழாழன்,** ஓசூர்

என் மீதும், எனது கவிதைகளின் மீதும் அன்புகொண்டு இதழைத் தொடர்ந்து அனுப்புகிறீர்கள். மிக்க நன்றி. எனது மாணவர்களுக்கும் ஒருசில ஏழைதாசன் கவிதைகளை அறிமுகப்படுத்தினேன். அருப்புக்கோட்டை நூலக வாசக வட்டத்தின் தலைவர் பொறுப்பில் உள்ளேன். சிற்றிதழ் அறிமுகத்தில் ஏழைதாசனையும் அறிமுகப்படுத்தினேன்.

— பேராசிரியர். **கு. இராமச்சந்திரன்,** அருப்புக்கோட்டை



படிப்பகம்

www.padippakam.com

# சிற்றிதழ் நேசர்! முத்தமிழ் தாசர்!



இரா.சு. கிருஷ்ணசுவாமி எனும் இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களை வ.க. என சுருக்கி அனைவரும் அன்புடன் அழைக்கிறார்கள். திருநெல்வேலி ராஜவல்லிபுரத்தில் 12-11-1920 அன்று பிறந்தார். பெற்றோர் சுப்பிரமணிய பிள்ளை - மகமாயிஅம்மாள். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்து, 1937-41 வரை அரசு குமாஸ்தாவாக பணியாற்றினார். எழுத்துத் துறையில் வளர்ச்சி பெறவேண்டும் என்ற ஆர்வத்தால் அரசுப் பணியை கைவிட்டார்.

1939-ல் இவர் எழுதிய முதல் சிறுகதை 'சந்திரகாந்தக்கல்' பிரசண்ட விகடன் இதழில் வெளியானது. 1943-ல் புதுக்கோட்டை 'திருமகள்' பிறகு கோயம்புத்தூர் 'சினிமா உலகம்', சென்னை 'நவசக்தி'. திருச்சி துறையூர் 'கிராம ஊழியன்', 'மறுமலர்ச்சி' மாதம் இருமுறை இதழில், 1950-51ல் சென்னை 'ஹனுமான்' வார இதழில் என பல்வேறு பத்திரிகைகளில் பணியாற்றி உள்ளார். பின்னர் சுதந்திர எழுத்தாளராகவே வாழத் தொடங்கினார்.

சிறுகதைத் தொகுப்பு-10, நாவல்கள்-11, குறுநாவல்-1, கவிதை-1, நாடகம்-1, கட்டுரைகள்-12, வாழ்க்கை வரலாறு-2, மொழிபெயர்ப்பு-9 கடிதங்கள் தொகுப்பு-1 ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். சாகித்ய அகாதமிக்கு இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் 1. ராகுல் சாங்கிருத்யாயன், 2. புதுமைப்பித்தன், நேசனல் புக் ட்ரஸ்ட்டுக்காக - சமீப காலத் தமிழ் சிறுகதைகள் தொகுப்பு போன்ற நூல்களும் படைத்துள்ளார்.

1978-ல் இவர் எழுதிய 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' நூலுக்கு சாகித்ய அகாதமி பரிசு வழங்கியது. 1987-ல் 'எழுத்தாளர்கள் பத்திரிகைகள் - அன்றும் இன்றும்' நூலுக்கு தமிழக அரசு பரிசு வழங்கி உள்ளது. மேலும் பல அமைப்புகள் 'தமிழ்ப்பணி விருது' அளித்தும், 'மூத்த தமிழ் எழுத்தாளர்' என்று பாராட்டியும் சிறப்பித்துள்ளன. 2000 ஆகஸ்டில் ஆழ்வார்கள் ஆய்வு மையம் 'கலைஞர் விருது' அளித்து பெருமை படுத்தியது. 2000 நவம்பரில் நெல்லையில் நடந்த தமிழகப் பெருவிழாவில் தமிழ்ச் சான்றோர் பேரவையினர், 'மூத்த தமிழறிஞர்' விருது வழங்கிப் பாராட்டினர்.



படிப்பகம்

www.padippakam.com

★ வ. சு. படிப்பது, எழுதுவது, ஊர்கள் சுற்றுவது என்பதைத் தனது வாழ்க்கையாக விரித்துக் கொண்டார். சிற்றிதழ்களை ஊக்குவிக்க அலாதி பிரியம் உள்ளவர்.

★ இந்த வாழ்க்கை முறைக்கு மனைவி, குடும்பம், பொறுப்புகள் எல்லாம் தடையாக இருக்கும் என்பதால், திருமணம் செய்து கொள்ளாமல் தனியனாகவே வாழ்வது என உறுதி பூண்டு, அவ்விதமே வாழ்கிறார்.

★ பாலாஜி 'லைலா மஜ்னு' என்ற திரைப் படத்துக்கு வசனம் எழுதிய பிறகு, சினிமாத்துறை தனக்குச் சரிபட்டு வராது என்று தீர்மானித்து, பின்னர் தேடி வந்த திரைப்பட வாய்ப்புகள் பலவற்றையும் வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்.

★ அரசியல் கட்சி, இலக்கிய அமைப்புகள், சங்கங்கள், கூட்டங்கள் முதலிய எதிலும் ஈடுபாடு கொள்ளாது, படிப்பதிலும் எழுதுவதிலும் ஊர்கள் சுற்று வதிலும் ஆர்வம் கொண்டு வளர்ந்தார்.

★ நையாண்டி பாரதி, கோரநாதன், மிவாஸ்கி, சொக்கலிங்கம், சொனா முனா, இளவல், ரா.சு.கி முதலிய பல வேறு புனைப் பெயர்களிலும் நிறைய எழுதினார்.

★ சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதியதோடு கோயில்களை மூடுங்கள், அடியுங்கள் சாவுமணி ஈட்டி முனை, எப்படி உருப்படும்?, கொடு கல்தா, அறிவின் கேள்வி போன்ற சிந்தனைச் சிறுபிரசுரங்கள் எழுதி வெளியிட்டு, சிந்தனை விழிப்பு ஏற்படுத்துவதில் ஈடுபட்டார்.

★ 81-வது அகவையில் காலடி பதித்துள்ள இந்நிலையிலும் புத்தகங்கள் படிப்பதிலும், கதை - கட்டுரைகள் எழுதுவதிலும், கடிதங்கள் எழுதி, நட்புறவு வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி உழைக்கிறார். அன்னாருக்கு ஏழைதாசனின் வாழ்த்துக்கள்.

முகவரி : 10-ஏ. மார்டன் பிளாட்ஸ், லாயிட்ஸ் சாலை, புதுத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

— ஏழைதாசன், புதுக்கோட்டை - 2



படிப்பகம்

www.padippakam.com

# ஏழைதாசன்

- ஆண்டுக் கட்டணம் : ரூ. 35/-
- வாழ்நாள் கட்டணம் : ரூ. 350/-

✶ 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.

(கட்டணம் செலுத்தாதவர்க்கு இதழ் நிறுத்தப்படும். தொகையை பணவிடை, காசோலை, வரைவோலை மூலம் செலுத்தலாம். படைப்பாளர்கள் இதழ் பரவ, வளர உதவலாம் நல்லெண்ணத்துடன் முகவராக செயல்பட விருப்பமுள்ளவர்கள் தொடர்புறுக.)

---

உலகு வாழ் தமிழர்களுக்கு ஏழைதாசன் படைப்புகள்

☐ **பார்க்க — படிக்க — கேட்க — அனுப்ப** ☐

Internet : http : // www.ealaidhason.8m.com

www.elaignan.de (or) www.radiotamil.de

www.intamm com

E. Mail : ealaidhason@hotmail.com

---

# 'எய்ட்ஸ்' தடுப்பு மொழிகள்

136. கற்பனைக்குக்கூட வேண்டாம் விளையாட்டு.
விற்பனைப் பெண்டீரா! வீதியைமாற்று.

137. ஆண்மைத் திருட்டை அனுமதிக்காதீர்கள்
ஆட்கொல்லி நோயால் பரிதவிக்காதீர்கள்.

138. வயதுவந்தோர் கல்வியை பலப்படுத்துக.
வருமுன்னே காப்பதை புலப்படுத்துக.

139. போதை மருந்து; பொருந்தா விருந்து.
கோதை உறவு; ஏமநோய் வரவு.

140. உலக எய்ட்ஸ் தினம் டிசம்பர்-1
எச்.ஐ.வி. மரணத்தில் நாமக்கல் நம்பர்-1

— **ஏழைதாசன்,** புதுக்கோட்டை - 2



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியச் செய்திகள்

★ சுடரொளி வெளியீட்டுக் கழகமும் இலண்டன் தமிழ் இலக்கிய மன்றமும் இணைந்து நடத்திய உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் டாக்டர் பழனி இளங்கம்பன் ஆறுதல் பரிசு ரூ. 1000 பெறுகிறார்.

★ 11—11—2000 புதுக்கோட்டை நகர்மன்றத்தில் பாவேந்தர் பாரதி தாசன் இலக்கியப் பேரவை நடத்திய இலக்கியத் திருவிழாவில் கவிக்கோ அப்துல்ரகுமான் கலந்து கொண்டார்.

★ 12—11—2000 கோவை தன்னம்பிக்கை அறக்கட்டளை சார்பில் கவிதாசன் எழுதிய 'முன்னேற்றமே மூச்சுக்காற்று' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

★ பூந்தளிர், கோகுலம், விஜயபாரதம், குங்குமம் இதழ்களில் பணி புரிந்த கவிஞர் அழகு பழனிச்சாமி 28—1—2000ல் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

★ 12—11—2000 மதுரை தாய்மண் இலக்கியக் கழகத் திருவிழாவில் 'தமிழைப் போற்றுவோம்' கவியரங்கம் நடைபெற்றது கவிஞர் இரா. இரவி வரவேற்புரை ஆற்றினார்.

★ 3—12—2000 திருச்சி நாம் தமிழர் இயக்கத்தின் நூல் வெளியீடு, பொதுக்குழு, கருத்தரங்கம் ஆகியன திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற இருக்கிறது.

★ 16—12—2000 தமிழக இளைஞர் முன்னணியின் 4-வது மாநாடு திண்டிவனத்தில் நடைபெற உள்ளதாக அதன் பொதுச் செயலாளர் திரு. நா. வைகறை அறிவிக்கிறார்.

---

**உங்களது சிறந்த 'ஐக்கூ' கவிதைகளை அனுப்பி வைத்து விட்டீர்களா!**

**ஐக்கூ-200 கடைசித் தேதி : 31-12-2000**

---



படிப்பகம்

www.padippakam.com

# கோமல் பக்கங்கள்

இப்போதெல்லாம் சிறுபத்திரிகைகள் சார்ந்த புத்தக வெளியீட்டு விழாக்கள் தமிழ் சினிமாவின் முதல் நாள் படப்பிடிப்பு பூஜையையும் மிஞ்சக் கூடிய வகையில் நடந்து வருகின்றன

பக்தி (அறம்), அரசியல் (பொருள்), சினிமா (இன்பம்) என்ற துறைகளில் என்னென்ன மலினங்கள் உண்டோ அவ்வளவையும் இந்தப் புத்தக வெளியீட்டு விழாக்களில் காண முடிகிறது.

ஒரு எழுத்தாளருக்கு குழந்தை பிறக்கிறது குழந்தைக்கு காது குத்தும் வைபவத்தை ஊரெல்லாம் வியக்கக் கொண்டாட வேண்டுமென எழுத்தாளருக்கு ஆசை. சடுதியில் தான் எழுதியிருந்த கவிதை முத்துக்களைத் தொகுக்கிறார் காதணி விழாவோடு புத்தக வெளியீட்டை இணைக்கிறார் தமிழகத்தின் எழுத்துலகப் பிரமுகர்கள் அத்தனை பேரும் புத்தக வெளியீட்டு விழாவுக்குத் திரள்கின்றனர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

புத்தகமும் வெளியிட்டாயிற்று; ஊரார் மற்றும் உற்றார் மத்தியில் பெரிய ஆள் என்றும் காண்பித்துக் கொண்டாயிற்று பங்காளி, பகையாளிகளுக்கும் ஒரு மறைமுகமான மிரட்டல் விட்டதுபோல் ஆயிற்று. ஆனால் பாவம், எழுத்தாளரின் மனைவி. குழந்தை பிறந்து நாற்பது நாட்களே ஆன பச்சை உடம்புடன் இலக்கிய ஜாம்பவான்கள் நூறு பேருக்கு ஆட்டுக்கிடா வெட்டி பிரியாணி செய்ய வேண்டிய வேலை! கிடாவெட்டில் இன்னொரு விஷயமும் உண்டு மாடன், காடன், வேடன், காத்தவராயன் போன்ற சிறு தெய்வங்களுக்குத்தான் கிடா ஆட்டுப்பலி!

இப்படியே போனால் நரபலியும் கொடுப்பார்கள் என்று தோன்றுகிறது. பாரதியிடம் துவங்கிய நவீனத்துவம், சிறுபத்திரிகையில் ஊடுருவிவிட்ட இந்துத்துவ / மதவாத / ஜாதீயக் கும்பலிடம் மாட்டிக் கொண்டு விழிபிதுங்கி நிற்கும் என்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

## விழா நம்பர் ரெண்டு :

இது ஒரு சாதனை விழா. ஒரே நாளில் இருபத்தேழு புத்தகங்கள் வெளியீடு! கவிதைப் புத்தகங்கள் - ஒன்பது, மொழிபெயர்ப்புப் புத்தகங்கள் ஒன்பது, பிறதுறைப் புத்தகங்கள் - ஒன்பது குளுகுளு ஏ.சி. ஹால். கட்டுக்கடங்காத கூட்டம். அப்போது அரங்கத்திற்கு வெளியே ஒரு வேனில் விருந்து திபு திபுவென்று பெண்கள் கூட்டம். ‘சிறுபத்திரிகை உலகம் பெண்களே அற்ற பாலைவனமாயிற்றே... ஏது இத்தனை பெண்கள்!’ என மூக்கில் விரலை வைத்தேன். ‘வாயைப் பிளக்காதே... இவர்களெல்லாம் கவிஞர் எக்ஸின் குடும்பத்தினர்’ என்று என்னை எச்சரித்தான் நண்பன். கவிஞர் எக்ஸின் கவிதைத் தொகுதி அன்று வெளியிடப்பட இருந்த ஒன்பது தொகுதிகளுள் ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com

உள்ளே போய் அமர்ந்தோம். துவக்கவுரை ஆற்றிக் கொண்டிருந்தார் ஜுஜாதா. (அப்படித்தான் உச்சரிப்பார் மூணாங்கிளாஸ் மட்டுமே படித்த என் அம்மா) கவிதை என்றால் என்ன, கவிதை எழுதுவது எப்படி என்று விளக்கிக் கொண்டிருந்தார் அவர். 'பார்வையாளர்களில் பாதிப்பேர் தமிழகத்தின் பிரபலமான கவிஞர்களாயிற்றே, இவர்களிடம் போய் கிளாஸ் எடுக்கலாமா' என்ற கூச்ச நாச்சம்கூட அவரிடம் இல்லாதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்போது மெதுவாக, பூனையைப்போல் பதுங்கிப் பதுங்கி நுழைந்தார் கவிஞர் எக்ஸ். ஆறு வயதுப் பெண் குழந்தை அவர் கையைப் பற்றியிருந்தது, அவர் மகள். திரு திருவென சற்று நேரம் விழித்தார் கவிஞர். ஏதோ வரக்கூடாத இடம் ஒன்றிற்குள் நுழைந்து விட்டது போலிருந்தது அவர் பார்வை. சற்று நேரம் பார்வையாளர் பகுதியில் உட்காரலாமா அல்லது மேடைக்குச் செல்லலாமா என்று யோசிப்பதைப் போல் பாவனை செய்தார். பிறகு குழந்தையுடன் மேடையை நோக்கிச் சென்று காலியாக இருந்த இருக்கையில் சற்றே லஜ்ஜையுடன் அமர்ந்து கொண்டார். எங்கள் ஊரில் 'ரொம்ப கொசர்றியப்பா' என்பார்கள். கொசறுதல் - ஆண்கள் நாணப்படுதல். அன்றைய தினம் ரொம்பத்தான் கொசறினார் கவிஞர்.

குழந்தையுடன் மேடையில் நுழைந்த கவிஞரைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஜுஜாதா அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக சற்றே செயற்கையான தொனியுடன் 'என்ன, அவர்களும் கவிதை எழுதுவார்களா?' என்று குழந்தையைச் சுட்டிக்காட்டி கவிஞரிடம் கேட்டார். அந்த அரிய நகைச்சுவையைக் கேட்டு அரங்கமே சிரித்தது மீண்டும் 'கொசறிய'படி இருக்கையிலேயே நெளிந்தார் கவிஞர்.

அடுத்து, ஒரு புத்தகத்தை வெளியிட்டார் ஜுஜாதா பிரதியைப் பெற்றுக் கொண்டவர் கவிஞர் விக்ரமாதித்யன் பிரதியைப் பெற்றுக் கொண்ட கவிஞர் உடனே ஜுஜாதாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

அதற்கு மேல் அசிங்கத்தைப் பொறுக்க முடியாமல் நாங்கள் சிலபேர் அரங்கத்தைவிட்டு வெளியேறினோம்.

---

**சாருநிவேதிதா**

---

● எக்ஸில் இதழ் - 10, பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

**ஆபத்து நிறைந்தது?**
அடிக்கடி கிளைதாவும் சில
அரசியல் வாதிகளின் சினேகம்!

**தவிர்க்க வேண்டியது?**
ஓதியதை மட்டுமே
உருட்டி மிரட்டுகிற சில
பண்டித மணிகளின் நெருக்கம்!

**இருக்கக் கூடாதது?**
விபத்தில் சிக்கித்
துடிப்பவனைக் கண்டும்
ஒதுங்குகிற இரும்புமனம்!

**படிக்கக் கூடாதது?**
அவிழ்க்க முடியாத சிக்கலாய்
அதி அறிவு ஜீவிகளின்
புலனுக்கெட்டாத சில
புதிர்க் கவிதைகள்!

**கேட்கக் கூடாதது?**
சாமி ஊர்வலத்தில்
சங்கீதக் கொலைபுரியும் சிலரின்
நாதஸ்வர வாசிப்பு!

**மன்னிக்கக் கூடாதது?**
தேசத்தைப் பற்றி சிறிதும்
நேசமிலா ஈனச் செயல்!

**கண்டிக்கத் தக்கது?**
பொருள் தகுதி ஒன்றைத் தவிர
பிற தகுதி இல்லாதானை
பெரிதாய் புகழ்தல்!

**கேள்வியும் பதிலும்:** கருமலைப் பழம் நீ



படிப்பகம்

www.padippakam.com

# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

**H.I.V.** கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்ட்ரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக ப ஆற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

## அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம்" 7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.
(மனோன்ம ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்ம ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T.கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.

படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No, 55308 / 92
R.C. No. 22449 / 98 ● Regd. No. PMG / CR / 02 / 2000 / PDK

## ஆசிரியர் தொகுதி

(புதுக்கோட்டையில் நடந்த சாகித்ய அகாதமி விருது பெற்ற கவிக்கோ அப்துல்ரகுமானுக்கு பாராட்டு விழாவில் கலந்து கொண்டு திரு. கவிக்கோ அவர்கள் பேசியதிலிருந்து...)

★ தினந்தோறும் பல கடிதங்கள் வருகின்றது. அவை அனைத்திற்கும் 'நலம். நலமறிய அவா' என பதில் எழுதிக் கொண்டிருக்க முடியாது.

★ ஒரு பெரிய காவியம் படைப்பதில் முழுமையாக கவனம் செலுத்தி வருவதால் எனது ரசிகர்கள் இதை பெரிது படுத்த வேண்டாம்.

★ கண்ணதாசன் தலைமையில் கவியரங்கம் செய்தேன். எனது கவிதை நன்றாக இருப்பதாகச் சொல்லி கண்ணதாசன் வாங்கிச் சென்றார். பின்னர் திரைப்படப் பாடல் வரிகளாக எனது வரிகள் வந்தன.

★ இப்போதுள்ள இளங்கவிஞர்கள் எனது கவிதைகளின் அடியையோ, வரியையோ, வார்த்தையையோ, கருத்தையோ எடுத்துக் கையாளுவதாக எனது ரசிகர்கள் எனக்கு எழுதுகிறார்கள்.

★ புதுக்கோட்டை எனது பூர்வீகம் வாழ்ந்த ஊராகும். எனது தாத்தா இங்குதான் பிறந்தார். பின்னர் மதுரை. அப்புறம் வாணியம்பாடி.

★ கலைஞரைப் பார்க்க நான் சென்றால் எழுந்து நின்று வரவேற்பார். நான் அமைச்சராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ ஆகியிருந்தால் நான்தான் எழுந்திருக்க வேண்டும். எனவே கவிஞராக இருப்பதில் பெருமைப் படுகிறேன்.

★ உங்கள் உணர்வை, அன்பை ஏற்றுக் கொள்கிறேன். பாராட்டை ஏற்க மாட்டேன். ஏனெனில் நான் எதையும் சாதித்து விட்டதாக நினைக்கவில்லை. இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது.

ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு,
வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு
Address : 26, Adappanvayal 8th Street, Pudukkottai-622002.TN.India

படிப்பகம்